பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 09 சனிக்கிழமை (22.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :57

# வன்னி வந்த உடனேயே பாலா பிரபாவுடன் மந்திராலோசனை!

## நோர்வேக் குழுவினருடன் இன்று நடத்தும் பேச்சுக்கள் குறித்து முக்கியமாக ஆராய்வு

கிளிநொச்சி,ஜனவரி22

**நேற்று நண்பகல் கிளிநொச்சியை வந்தடைந்த விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் உடனேயே தலைவர் பிரபாகரனைச் சந்தித்து மந்திராலோசனை நடத்தினார்.**

இன்று கிளிநொச்சி வரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் தலைமையிலான சமாதானக் குழுவினர் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். அதில் கலந்துகொள்வதற்காகத் தலைவர் பிரபாகரனின் அழைப்பின் பேரில் பாலசிங்கம் நேற்று வன்னி வந்து சேர்ந்தார்.

இன்றைய சந்திப்பில் பேசப்படவேண்டிய விடயங்கள் குறித்து அவர் தலைவருடன் ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக, கிளிநொச்சியை வந்தடைந்த மதியுரைஞர் பாலா அங்கு செய்தியாளர்களிடம் பேசும்போது "ஆழிப்பேரலையால் பாதிக்

(10ஆம் பக்கம் பார்க்க)





நேற்று வன்னிக்கு வந்து சேர்ந்த புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் மற்றும் போராளிகள் ஆகியோர் வரவேற்று அழைத்து வருவதை முதலாவது படத்திலும், மதியுரைஞர் பாலசிங்கம் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் மந்திராலோசனையில் ஈடுபட்டிருப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## காலநிலை சீர்கேட்டினால் பாலாவின் பயணத்தில் தாமதம்

### அநுராதபுரத்தில் சிலமணிநேரம் தங்கிச் சென்றார்

கொழும்பு.ஜன.22

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் லண்டனிலிருந்து நேற்று வன்னி சென்றடைந்தார். காலநிலை சீர்கேட்டால் அவர் சென்ற ஹெலி அநுராதபுரத்தில் தரித்துநின்று சென்றதால் திட்டமிடப்பட்டதிலும் பார்க்க சில மணிநேரம் தாமதமாகவே அவர் கிளிநொச்சியைச் சென்றடைந்தார்.

நேற்றுமுன்தினம் லண்டனிலிருந்து புறப்பட்ட அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். அங்கிருந்து விமானப் படையின் விசேட ஹெலியில் அவர்கள் வன்னிக்குப் புறப்பட்டனர்.

காலநிலை சீர்கேடு காரணமாக, அவர்கள் சென்ற ஹெலி அநுராதபுரம் விமானப்படைத் தளத்தில் தரையிறங்க வேண்டியதாயிற்று.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு ஆனந்தராஜாவின் பெயரும் சிபாரிசு

கொழும்பு.ஜன.22

லஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக் குழு உறுப்பினர்களுள் ஒருவரான முன்னாள் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

தேசிய அரசமைப்புச் சபை இதற்கான சிபாரிசுகளை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது. முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர்களான அமீர் ஸ்மைல், பி.எதுசூரிய ஆகியோருடன் முன்னாள் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பெயரும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின்படி ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள், அரசமைப்புச் சபையின் சிபாரிசுகளின் அடிப்படையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஏ.ஆனந்தகுமாரசாமியின் தலைமையிலான ஆணைக்குழுவின் ஆயுள் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது.

இதில் நீதியரசர் ஆனந்தகுமாரசாமியுடன் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கே.விக்னராஜா, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கிங்ஸ்லி விக்கிரமசூரிய ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

அதன் பின்னர் தேசிய அரசமைப்புச் சபை சிபாரிசு செய்த மூவரின் பெயர்களை ஜனாதிபதி நிராகரித்திருந்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்தின் உதவிகள் இங்கு சரியாகப் பகிரப்படவேண்டும்

### கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்தபின் தமிழ்ச்செல்வன் கருத்து

கிளிநொச்சி.ஜன.22

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக சர்வதேச சமூகம் வழங்குகின்ற உதவிகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் எனத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியிருக்கின்றார்.

நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்தபின்னர் செய்தியாளர்களிடம் கருத்துவெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நேற்றுப் பிற்பகல் சுமார் இரண்டு மணிநேரம் வரை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

*கேள்வி :* இன்று என்ன விடயங்கள் பேசப்பட்டன?

*பதில்:* முக்கியமாக இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி மனிதாபிமானப் பணிகள் பற்றியும் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினோம். இந்த அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட எமது மக்களுடைய உடனடித் தேவைகள் சம்பந்தமாகவும் உடனடி மறுவாழ்வுப் பணிகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் நிவாரண உதவிகள் பற்றி நேற்று ஆராய்வு

கொழும்பு.ஜன.22

இலங்கை வந்துள்ள சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளர்களான நோர்வேத் தூதுக் குழுவினர் நேற்று ஜனாதிபதியை அவரது உத்தியோகபூர்வ மாளிகையில் சந்தித்துப் பேசினர்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்டி எவ்.ஜோன்சன் அம்மையார், பிரதி வெளிவிவகார அமைச்சர் வீடர் ஹெல்கிஸன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கும், அரசுக்குமான தமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபங்களையும் நோர்வேயின் இரு அமைச்சர்களும் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவையும் உதவிகளையும் நோர்வே அரசு தொடர்ந்தும் வழங்கும் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது, நோர்வே அமைச்சர்களின் வருகைக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். பாதிகப்பட்ட மக்களுக்காக அடுத்த கட்டமாக, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மீள்கட்டுமானத்தை

(10ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கற்றல் உபகரணங்கள் அனுப்பிவைப்பு

குடத்தனை,ஜன.22

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை, கெருடாவில், தொண்டைமானாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இந்தக் கற்றல் உபகரணங்களை கனடா, லண்டன் ஆகிய நாடுகளில் வசிக்கும் உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த கந்தசாமி இராசபூபதி, இரத்தினசிங்கம் குகேந்திரன் ஆகிய இரு குடும்பங்களுமே அனுப்பிவைத்துள்ளன. (-78)

## பிரிவுபசார விழா

வலி.தென்மேற்கு,ஜன.22

பண்டத்தரிப்பு தபால் அதிபராக நான்கு வருடங்கள் பணியாற்றி சுழிபுரம் தபால் அதிபராக இம்மாதம் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள எஸ்.சத்தியசீலனுக்கு பண்டத்தரிப்பு தபாலகத்தினரால் பிரிவு உபசார விழா கடந்த சனிக்கிழமையன்று நடத்தப்பட்டது.

தற்போதைய தபால் அதிபர் எம்.நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இப்பகுதியிலுள்ள உப தபால் அலுவலங்களின் தபால் அதிபர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். (10-135)

## ஒளிவிளக்கு ஆராதனை

சுழிபுரம்,ஜன.22

சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்தோரின் ஆன்மசாந்திக்காகவும், பாதிப்புற்றோர் நலன் பெறவும் எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 6 மணிக்கு வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஒளிவிளக்குகள் ஏற்றி அஞ்சலியும் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளன.

அச்சமயம் ஆயிரத்தெட்டு ஒளி விளக்குகள் ஏற்றப்பட்டு அஞ்சலியிலும் பிரார்த்தனையிலும் மக்கள் ஈடுபடவுள்ளனர். (10-28)

## வடமராட்சி கிழக்கில் தபாலகங்கள் இயங்குகின்றன

செம்பியன்பற்று,ஜன.22

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள தபாலகங்கள் கடந்த 19 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் உபதபாலகத்தைத் தவிர ஏனைய தபாலகங்களான செம்பியன்பற்று, ஆழியவளை, முள்ளியான் ஆகியவை இயங்கத்தொடங்கியுள்ளன.

இவற்றில் செம்பியன்பற்று, தாளையடி ஆகிய தபாலகங்கள் முற்றுமுழுதாகச் சேதமடைந்துவிட்டன. எனினும் மக்களின் நன்மைகருதி தனியார் வீடுகளில் அவை தற்காலிகமாக இயங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-203-36)

# கோதுமை மாவுடன் வேறு பொருள்கள் வற்புறுத்தல் இன்றியே விற்பனை

## மாவட்டக் கூட்டுறவுச் சபையும் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.22

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கோதுமை மா வாங்கும் பாவனையாளர்கள் வேறு பொருள்களையும் வாங்குவது சகஜம் எந்தவித நிர்ப்பந்தமோ வற்புறுத்தலோ இன்றியே அவை வழங்கப்படுகின்றன.

- இவ்வாறு விளக்கமளிக்கிறது யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை.

தென்மராட்சிப் பகுதி கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் முகப்பூச்சு கிறீம் வாங்குவோருக்கு மட்டுமே கோதுமை மா விநியோகிக்கப்படுவதான தகவலை உள்ளடக்கி உதயனில் வெளியாகிய செய்தி தொடர்பாக கூட்டுறவுச் சபை இந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

'ஓடிவாங்கோ..... ஓ வாங்கோ..... கிறீம் வாங்கினால் கோதுமை மா' என்ற தலைப்பில் கடந்த புதனன்று உதயனில் இந்தச் செய்தி வெளியாகி இருந்தது.

அது தொடர்பாக மாவட்டக் கூட்டுறவுச் சபை விடுத்திருக்கும் விளக்க அறிக்கையில்-

தமிழ்மக்கள் மீது யுத்தம் வலிந்து திணிக்கப்பட்ட காலம் முதல் சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் வரை இடம்பெற்ற உயிர், உடைமை இழப்புகள், இடம்பெயர்வுகளின்போது மக்கள் தேவை அறிந்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களது உணவுத்தேவையை பூர்த்தி செய்து வருவது யாவரும் அறிந்த விடயமாகும்.

இந்நிலையில் தென்மராட்சிப் பகுதியில் கோதுமை மா விற்பனை தொடர்பாகப் பத்திரிகையில் வெளியான செய்தி கூட்டுறவாளர்கள் மீது சேற்றினை வாரிப் பூசுவதாக அமைந்துள்ளது.

கோதுமை மா விற்பனையை பொறுத்த மட்டில் இன்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏகபோக உரிமை வழங்கப்படவில்லை. தனியார் துறையினருக்கும் கோதுமை மா விற்பனை உரிமை வழங்கப்பட்டுள்ளது. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தாம் பெறும் கோதுமை மாவினை தனது பாவனையாளர்களுக்குப் பங்கீட்டு அட்டைக்கு ஏற்ப நியாய விலையில் 2 கிலோ வீதம் வழங்கிவருகிறார்கள். பங்கீட்டு அட்டைக்கு விநியோகித்த பின் மேலதிகமாக உள்ள கோதுமை மாவினை வாங்கும் பாவனையாளர்களுக்கு அவர்களுக்குத் தேவையான விற்பனைப் பொருள்களையும் எதுவித நிர்ப்பந்தமோ வற்புறுத்தலோ இன்றி வழங்கிவருவது சகஜம். அரச உதவிகள் எதுவும் இன்றி தனது உழைப்பில் இருந்தே பணியாளர் சம்பளம் உள்ளிட்ட அனைத்து நிர்வாகச் செலவுகளையும் சங்கங்கள் ஈடுசெய்ய வேண்டியுள்ளது.

எனவே, பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாகச் சம்பந்தப்பட்ட சங்க நிர்வாகத்துடன் தொடர்புகொண்டபோது கிறீம் வாங்கினால் தான் 2 கிலோ மா தரப்படும் என்று எந்தவொரு பாவனையாளனும் நிர்ப்பந்திக்கப்படவுமில்லை ஓடிவாங்கோ ஓடிவாங்கோ என்று கூப்பாடு போடவுமில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ற வகையில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாசு கற்பிக்கும் வகையில் வெளியிடப்பட்ட செய்தி கூட்டுறவாளர்களை மனவேதனைக்குள்ளாக்கியுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# ஜெயபுரத்தில் மோ.சைக்கிள் மீது வீரை மரம் வேருடன் சாய்ந்தது!

## இருவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில்

ஜெயபுரம்,ஜன.2

ஜெயபுரம் பிரதான வீதியில் ஜெயபுரம் பாடசாலைக்குச் சமீபமாக சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது வரை மரம் ஒன்று திடீரெனச் சாய்ந்தது. இதனால் மோட்டார் சைக்கிள் ஓட்டியும் அவருடன் கூடச்சென்றவரும் படுகாயங்களுக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 9.15 மணியளவில் இடம்பெற்றது.

முழங்காவிலில் இருந்து ஜெயபுரம் நீதிமன்றத்துக்குச் சென்றுகொண்டிருந்தோரின் மோட்டார் சைக்கிள் மீதே பாரிய வீரை மரம் வேருடன் சாய்ந்தது எனக் கூறப்படுகிறது.

படுகாயமடைந்த இருவரில் ஒருவர் செ. உதயச்சந்திரன் (வயது 37 - முழங்காவில்) என்று அடையாளம் காணப்பட்டார். அடுத்தவரின் பெயர் விவரம் தெரியவில்லை. இவர்களில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் காணப்பட்டார் என்று உதயன் செய்தியாளர் தெரிவித்தார். இருவரும் அம்புலன்ஸ் வண்டியில் உடனடியாக முழங்காவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு விரையப்பட்டனர். (ஜ-291)

# சுனாமி பாதித்த 75 குடும்பங்களுக்கு தேசிய எழுச்சிப் பேரவை நிதியுதவி

வலி.வடக்கு,ஜன.2

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக உயிரிழப்பைச் சந்தித்த குடும்பங்களுக்கு இதுவரை சுமார் நான்கு லட்சம் ரூபா நிதியினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் வழங்கியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திற்கு உட்பட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் மற்றும் தனியார் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கே இத்தொகையினை தேசிய எழுச்சிப் பேரவையினர் வழங்கி வருகின்றனர்.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, தும்பளை லூர்த்து மாதா ஆலயம், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், கற்கோவளம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியவற்றில் இயங்கும் முகாம்கள் மற்றும் இன்பருட்டிப் பகுதியில் தனிநபர் இல்லங்களில் தங்கியுள்ளவர்களுக்குமே இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

75 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வாறு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் இறப்புக்கு மேலதிகமான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-86)


Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7586001 முதல் 7597621 வரை

சீட்டிழுப்பு இல. 102 திகதி 20-1-2005

வெற்றி எண்கள் 3 5 9 8 6 7 சுப்பர் எண் 17

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,67,33,425/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,67,33,425/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 100 | 5,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 945 | 500/- | 4,72,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,674 | 50/- | 4,83,700/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 95,687 | 10/- | 9;56,870/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 98 | 1,000/- | 98,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 960 | 100/- | 96,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,577 | 20/- | 1,91,540/- |
| மொத்தம் | 1,17,072 | | 49,61,210/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா: 49,61,210/-

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,70,01,925/-

தொடர் இல. 6639431 க்கு மேற்பட்ட திங்கட்கிழமை நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 24 ஆம் திகதி மஞ்சள் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7587554-1-11
7590937-1-24
7586799-8-67
7592998-3-09
7594242-5-39
7586432-2-48
7590358-6-78
7595784-3-43

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# பாதாளக் குழுவினர் மூவர் நேற்று தங்கலவத்தவில் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஜன.22

பாதாள உலக நபர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பாதாள உலக நபர்கள் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த மோதல் சம்பவம் நிட்டம்புவ தங்கலவத்தை என்ற இடத்தில் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பொலீஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலொன்றை அடுத்து நிட்டம்புவ தங்கலவத்த என்ற இடத்திலுள்ள வீடொன்றை சுற்றிவளைத்தபோது அந்த வீட்டில் மறைந்திருந்த பாதாள உலக நபர்கள் பொலீஸாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் கைக்குண்டை வீசியும் தாக்குதல் நடத்தினர் என்று பொலீஸார் கூறினர்.

இதனையடுத்து பொலீஸார் நடத்திய பதில் துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பாதாள உலக நபர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

கொழும்புப் பகுதியில் இயங்கிவந்த பிரபல முஸ்லிம் பாதாள உலகக் குழுக்களில் முதன்மையானது எனக் கருதப்படும் குழுவைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் கொம்பனித்தெரு ஐயுப்கான் என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் ஒருவர் என பொலீஸார் தெரிவித்தனர். ஏனைய இருவரும் நேற்று மாலைவரை அடையாளம் காணப்படவில்லை.

ஐயூப்கான் பொலீஸாரால் நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்தவர் என்றும், பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு இவர் தலைமறைவாகவே வாழ்ந்து வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்கின்றனர் பொலீஸார். பொலீஸாரால் தேடப்படும் பாதாள உலக நபர்கள் இப்போது கொழும்பை விட்டுத் தப்பி வெளிமாவட்டங்களில் மறைந்து இருக்கின்றனர் எனப் பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

## அறநெறி ஆசிரியர் தேர்வுக்கு பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜன-22

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், பரீட்சைத் திணைக்களத்தின் உதவியுடன் நடத்தவுள்ள இந்து அறநெறி ஆசிரியர் (தர்மாசிரியர்) பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தவுள்ளன.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்புவோரை யாழ். செயலகத்தில் இயங்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தில் தமது பெயர், முகவரி போன்ற விவரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் கேட்டுள்ளார்.

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படவுள்ள இந்தப்பரீட்சை தொடர்ந்து வருடந்தோறும் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5-204)

## வரணி பாடசாலைக்கு பெயர் வளைவு

வரணி,ஜன.22

வரணி மகாவித்தியாலயத்திற்கு லண்டனில் வசிக்கும் அந்தப் பாடசாலையின் பழைய மாணவர் ஒருவர் 80ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக்கேற், பெயர்வளைவு என்பவற்றை வழங்கியுள்ளார்.

வரணி, இயற்றாலையைச் சேர்ந்த சின்னபு உதயகுலம் என்பவரே இந்த அன்பளிப்பைச் செய்துள்ளார்.

(எ-203-170)

## சித்திரபாடக் கைந்நூல் இலவச விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.22

எதிர்வரும் 2007ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்திரத்தை ஒரு பாடமாகக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு சித்திரபாடக் கைந்நூல்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் உள்ள ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிலையத்தில் வைத்து இந்தக் கைந்நூல்கள் வழங்கப்படவுள்ளன.(எ-203)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# குறுக்குவழி பற்றி சிந்திக்கும் ஜனாதிபதி

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அழிவுகளைச் சந்தித்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான ஆரம்ப வைபவம் ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த கருத்துக்கள் தென்னிலங்கையில் பெரும் அரசியல் சர்ச்சைகளைக் கிளப்பியிருக்கின்றன.

'அம்பாந்தோட்டைக்கு உதவுவோம்!' என்ற பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாட்டை மீளக் கட்டியெழுப்புதல் என்ற பாணியில் தமது அரசியல் காய்நகர்த்தல்கள் தொடர்பான உள்ளக் கிடக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாசூக்காக வெளியிட்டார். அதுவே பெரும் சர்ச்சையை - குழப்பத்தை - உண்டு பண்ணியிருக்கின்றது.

இலங்கை அரசமைப்புத் தந்த - வானளாவ உயர்ந்த - நிறைவேற்று அதிகாரத்தைக் கடந்த ஒரு தசாப்த காலமாகப் பிரயோகித்து அந்தப் பதவிச் சுகத்தை அனுபவித்த ஜனாதிபதி குமாரதுங்க, அந்தப் பதவிக் காலத்தின் அந்தத்தில் இப்போது நிற்கின்றார். அவர் விரும்பியோ, விரும்பாமலோ - தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின்படி - அவரது தற்போதைய பதவிக்காலத்துடன் அதிகாரமற்ற 'முன்னாள் ஜனாதிபதி' ஆகவேண்டியவர்தான் அவர். அந்த இரண்டாவது பதவிக்காலம் எப்போது முடிவடைகின்றது என்ற இழுபறி இருந்தாலும், அதை வைத்துக்கொண்டும் ஆக மேலும் ஒரு வருடத்துக்குத்தான் அவர் அதிகாரத்தைத் தக்க வைத்திருக்க முடியும்.

ஆக, இந்த வருட இறுதியில் - அல்லது அரசமைப்பு மற்றும் சட்டவியாக்கியானத்தைத் தமக்குச் சாதகமாகச் செய்ய வைத்துக்கொள்வதன் மூலம் அடுத்த ஆண்டு இறுதியில் - அதிகாரத்திலிருந்து இறங்கவேண்டிய சிக்கலில் இருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா. அதற்குப் பின்னர் அரசியலில் அவரின் நிலை அந்தகார இருள்தான்.

இதை நன்கு புரிந்து கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஏதேனும் ஒரு வகையில் தனது அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கான பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தார்; ஈடுபட்டிருக்கின்றார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயந்தான்.

இந்தக் கட்டத்திலேயே ஆழிப்பேரலை அனர்த்தம் ஆபத்பாந்தவனாய் அவரைக் காப்பாற்ற வந்து சேர்ந்திருக்கின்றது போலும்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடந்து புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டால் தானே தமது அதிகாரம் அந்தப் புதியவரின் கைக்குப் போகும், தம்மிடமிருந்து மாறும் என்றெல்லாம் கணக்கிடுகிறார் குமாரதுங்க.

ஜனாதிபதித் தேர்தலே நடக்காவிட்டால்...?

அதிகார மாற்றம் ஏது? தமது செல்வாக்குப் பறிபோகச் சந்தர்ப்பம் ஏது? - இப்படி எண்ணுகிறார் அவர்.

ஆழிப்பேரலையைக் காட்டி அடுத்த ஐந்து வருடங்களுக்குத் தேர்தல் எதையுமே நடத்த முடியாது; நடக்காது என்று ஜனாதிபதி குமாரதுங்க அறிவிப்பதன் பின்னணியில் உள்ள சூழ்ச்சித்திட்டம் - கபட எண்ணம் - இதுதான் என்கின்றன எதிர்க்கட்சிகள்.

இயற்கை அனர்த்தத்தைக் காட்டி, ஆட்சியதிகாரத்தை நீடிக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவின் தந்திரம் பலிக்குமா, வெற்றி பெறுமா என்பதெல்லாம் சந்தேகமே.

அனர்த்தப் பாதிப்பால் சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் நாட்டின் பக்கம் திரும்பியிருக்கும் அனுதாபத்தை நாட்டுக்கு லாபமாகப் பயன்படுத்துவதிலும் பார்க்க, தமது தனியான அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்கு நயமாகப் பயன்படுத்திக்கொள்ளவே ஜனாதிபதி திட்டமிடுகின்றார்; இவ்வாறு குற்றம் சுமத்தும் பிரதான ஐ.தே.கட்சி, அத்தகைய சதித்திட்டம் செயலுருப்பெற இடமளிக்கமாட்டோம் என்றும் சூளுரைக்கின்றது.

தம்முடைய திட்டத்துக்குப் பலமுனைகளிலும் வசமாக வலை விரித்திருக்கும் ஜனாதிபதியின் முயற்சியை, முறியடிக்கக் கூடிய பலமும், வலுவும், தலைமைத்துவமும், செயற்பாட்டுத் திறனும், உத்வேகமும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் உண்டா என்பது சந்தேகமே.

சட்ட முறையான வழியில் அரசமைப்பை மாற்றி, அதனடிப்படையில் சட்டரீதியாகத் தன்னை அரசியல் செல்வாக்கில் வைத்திருக்கச் செய்யும் போக்கில் ஜனாதிபதி செயற்படுவாராயின், அந்த முயற்சி குறைகூறத்தக்கதல்ல. ஆனால், அதற்குத் தேவையான நாடாளுமன்றப் பலமோ, அரசியல் ஆதரவோ, உறுதிப்பாடோ இல்லாத காரணத்தால்தான் குறுக்கு வழிபற்றிச் சிந்திக்கிறார் அவர் எனத் தோன்றுகின்றது.

ஆனால், அத்தகைய குறுக்கு வழி முயற்சி தென்னிலங்கை அரசியலில் இரத்தக்களரியை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்திவிடும் என்பதும் மறுக்கமுடியாத ஒன்றாகும்.

# சுனாமியால் அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பான முறைப்பாடுகள் பொலீஸ் நிலையங்களில் தேக்கம்

யாழ்ப்பாணம்.ஜன.22

சுனாமி பேரலையால் அழிவடைந்த வீடுகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான முறைப்பாடுகள் பொலீஸ் நிலையங்களில் குவிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேரலையால் சொத்துக்கள் அழிவடைந்த மக்கள் தமது சொத்தழிவு விவரங்களை கிராம அலுவலரின் சிபார்சுடன் பொலீஸ் நிலையங்களில் சமர்ப்பித்து வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் ஒவ்வொரு பொலீஸ் நிலையங்களிலும் குவிந்துள்ள போதிலும் இதுவரையில் அவை சான்றுபடுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சிப் பகுதியில் சொத்தழிவு தொடர்பாகச் சமர்ப்பித்த முறைப்பாடுகளுக்கே இவ்வாறு சான்று படுத்தப்படவில்லை.

இதேநேரம் - விண்ணப்பங்கள் சமர்ப்பித்த முறைப்பாட்டுக்காரர்கள் அவ்வப்பகுதியில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்குத் தினமும் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் எதிர்காலத்தில் அரசினால் வழங்கப்படவுள்ள சொத்தழிவு நிவாரணம் மற்றும் கனடாவுக்கான விசேட குடியேற்றம் என்பனவற்றுக்கான அனுமதி நிராகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (10-185)

# உலர் உணவு நிவாரண நிறுத்தத்துக்கு கிராம அலுவலர்கள் காரணம் அல்லர்

## கிராம உத்தியோகத்தர் சங்கம் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெற்று வருகின்ற குடும்பங்களில் சில குடும்பங்களின் நிவாரணம் நிறுத்தப்பட்டமைக்கு கிராம அலுவலர்கள் காரணம் அல்ல என்று வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உலர் உணவு நிவாரணம் பெற்று வருகின்ற குடும்பங்களின் மாதாந்த வருமானத்தை மீளாய்வு செய்து நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கைகள் சில பிரதேச செயலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசின் சுற்றறிக்கைக்கமைய பிரதேச செயலர்களின் பணிப்பின் பேரிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாரிய இடப்பெயர்வுகளையும் இன்னல்களையும் சந்தித்த குடும்பங்கள் தொழில்வாய்ப்புக்களையும் இழந்து நிற்கின்றன.

மக்களின் இந்த நிலையை எண்ணி அவர்களுக்குரிய உலர் உணவு நிவாரணத்தை இதுவரை கிராம அலுவலர்கள் நிறுத்தவில்லை. தற்பொழுது சில பிரதேச செயலாளர்களின் அறிவுறுத்தலுக்கமைய மாதாந்தம் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. இதுகூட கிராம அலுவலர்களின் தீர்மானம் அல்ல.

எனவே, நிவாரணம் நிறுத்தப்பட்டமைக்கும் கிராம அலுவலர்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# மாணவர் தடையின்றிக் கல்வியைத் தொடர கல்விச் சமூகம் ஒத்துழைக்க வேண்டும்

## கூட்டமைப்பு எம்.பி சிவநேசன் அழைப்பு

கரவெட்டி.ஜன.22

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தடையின்றித் தொடர்வதற்குக் கல்விசார் அதிகாரிகளும் கல்விச் சமூகமும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்.

வடமராட்சியில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு நேரடியாகச் சென்ற அவர் அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னரே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயற்கை அனர்த்தத்தின் மூலம் எமது மக்கள் அனைத்தையும் இழந்து நிற்கிறார்கள். அரசின் நிவாரண உதவிகள் கூட அவர்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கவில்லை.

முகாம்களில் உள்ள மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு அதிபர்கள் ஆயிரம் ரூபா முதல் 4 ஆயிரம் ரூபா வரை கட்டுப் பணம் கோருவதாக நலன்புரி நிலையங்களில் உள்ள பெற்றோர்கள் தெரிவிக்கின்றார்கள். இதனால் சில பெற்றோர்கள் தம்மிடம் உள்ள நகைகளை அடகு வைத்துப் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்கும் நிலை தோன்றியுள்ளது. முழுமையாக வசதியற்ற மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தும் சம்பவங்களும் நலன்புரி முகாம்களில் நிகழ்கின்றன.

எனவே, எமது வருங்கால சந்ததியின் கல்வி வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்படாத வகையில் முகாம்களில் உள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு கல்வி அதிகாரிகளும் பாடசாலை அதிபர்களும் மனிமாபிமானத்துத்துடனும், கருணையுணர்வுடனும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் தமது கல்வியைத் தடை யின்றித் தொடரமுடியும் - என்றார். (8-70)

# நன்கொடைகளையும் வழங்குநர்களின் விவரத்தையும் ஒளிவுமறைவின்றி வெளியிடுக!

## ட்ரான்ஸ்பேரன்ஸி அமைப்பு வற்புறுத்துகிறது

சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நன்கொடைகளின் விவரங்களை சம்பந்தப்பட்ட அனைவரும் ஒளிவுமறைவின்றி வெளியிடவேண்டும் என்று சர்வதேச 'ட்ரான்ஸ்பேரன்ஸி' அமைப்பு வற்புறுத்தியுள்ளது.

நிவாரணம் அல்லது மீள் கட்டுமானப் பணிகளுக்கென பெற்றுக்கொள்ளப்படும் பணம் மற்றும் நன்கொடைகளின் விவரங்களை அவைகளைப் பெற்றுக்கொள்ளும் சகல தரப்புகளும் வெளியிடவேண்டும்என்றும் இது தொடர்பாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்து வருவதாகவும் அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரான்ஸ் பேரன்ஸி இன்ரநஷனல் (Transparency International) விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வெளிநாடுகளிலிருந்து வரும் நிவாரண உதவிகளையும் நன்கொடைகளையும் பல அரச நிறுவனங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் குழுக்களும் ஊடகங்களும் தனிப்பட்டவர்களும் பெற்றுவருகிறார்கள். இந்த நன்கொடைகள் யாவும் ஊழல்களுக்கு இடம்தராமல் அதன் நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்று மக்களும் நீதி வழங்குபவர்களும் அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் இவைகளைப் பெற்றுக் கொள்பவர்கள் தாமாகவே முன்வந்து விவரங்களை வெளியிடுவதன் மூலம் நம்பிக்கையைக்கட்டியெழுப்ப முடியும்.

இந்த வகையில், அரசு தான் பெற்றுக் கொண்ட நன்கொடைகள், அவைகளை வழங்கியவர்களின் வாக்குறுதிகள் போன்வற்றை முன்னுரிமை கொடுத்து வெளியிடவேண்டுமென வற்புறுத்துகின்றோம்.

ஜனாதிபதி நிதியமும், பொது நிறுவனங்களும் மிகப்பெருமளவில் உதவிகளைப் பெற்றுக்கொண்டுள்ளன. இந்தப் பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை உறுதி செய்வதற்கும் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்களையும் இதில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம். (ப)

### நாளை

*தை 10*
*(23.01.2005)*
*ஞாயிற்றுக்கிழமை*
திதி : *திரயோதசி*
*பிற்பகல் 12.33 வரை*
நட்சத்திரம் : *திருவாதிரை*
*முன்னிரவு 9.43 வரை*
சுபநேரம் : *9.36 - 11.06*
ராகுகாலம் : *5.06 - 6.36*
*(யாவும் பழைய நேரப்படி)*

# வாகனங்களின் தகுதிப்பரிசோதனைக்கு யாழ்ப்பாணத்தில் விரிவான ஏற்பாடுகள்

வாகனங்கள் சீரான பொறிமுறையுடன் சேவையை மேற்கொள்கின்றனவா என்பதைக் கண்டறிய குடாநாட்டில் வாகனங்களின் தகுதிப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகம் செய்துவருகிறது.

இந்தத் திடீர் வாகனப் பரிசோதனைகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.அலுவலக உத்தியோகத்தர்களும், வாகனப் பரிசோதகர்களும் மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட வாகனப் பரிசோதகர் ஆர் .ஏ.பி.குலாஸ் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடும் பெரும்பாலான வாகனங்கள் ஒழுங்கான பொறிமுறைகள் இன்றி சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதனாலேயே வீதி விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. இதனைத் தவிர்க்கும் முகமாகவே இந்தத் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திடீர் பரிசோதனையின் போது வாகனத்தின் ரயர்கள், மின்விளக்குகள், மழைநீர் துடைப்பி (வைபர்) ,ஒலி எழுப்பி (கோர்ன்) மற்றும் சமிக்ஞைகள் (சிக்னல்கள்) என்பன உட்பட சகல பொறிகளும் சீராக இயங்குகின்றனவா? என்பது பற்றிப் பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

மேற்கூறப்பட்ட பொறிமுறைகள் சீராக இல்லாது சேவையில் ஈடுபடும் வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (எ-5)

### உதயவாக்கு

இறைவனால் கூட முடியாத செயல் ஒன்று உண்டு. நடந்ததை நடவாததாக ஆக்க அவனாலும் இயலாது.

- ஆப்பிக்க பாதிரியார்.

## பங்காளர் தேவை

கொழும்பில் இயங்கிக் கொண்டிருக்கும் அங்கர் விநியோகத்திற்கு பங்காளர் தேவை. இந் நிறுவனத்தில் மாதாந்தம் 20 மில்லியன் பெறுமதியான விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. பங்காளர் வெளிநாடு செல்ல இருப்பதால், முழுமையான நிர்வாகத்தினையும் திறமையாக செயற்படுத்தக் கூடியவராகவும் மூலதனம் இடக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

விவரங்களுக்கு:
T.P No - 021 222 6529
H.PNo. - 077 7769237

(41143)(21-17-18)

## உடன் வாடகைக்கு

இல.113, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் நான்கு அறைகள், பெரிய Hall, இரண்டு குளியலறைகள், இரண்டு குசினிகள், விறாந்தை, கராஜ், வாகனத்தரிப்பிடம் முதலியனவற்றுடன் கூடிய சுற்று மதில்கள் அமைந்த ஒரு பெரிய வீடு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு உடன் வாடகைக்கு உண்டு. அவர்களின் தேவைகளுக்கேற்ற வகையில் புனரமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
(46-17-18-21) T.P. 0776539959 (41082)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரிய எமது 28.12.2004 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரம் தொடர்பாக இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது. சுனாமி அனர்த்தம் காரணமாக இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாள் 31.01.2005 திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டு மேற்படி விளம்பரம் மீண்டும் கீழே தரப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் அதன் கடல்வள அபிவிருத்தி நிலையமூடாக தமிழ்மொழி மூலம் நடத்தும் இரண்டு ஆண்டுகால மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி 15.02.2005 அன்று தொடங்கி இரண்டு கல்வியாண்டுகள் நடைபெறும்.

இக்கற்கை நெறிக்கு தகுதி வாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய எவரும் விண்ணப்பிக்கலாம். தெரிவு உளச்சார்புப்பரீட்சை மூலமும் நேர்காணல் மூலமும் திறமை அடிப்படையில் அமையும்.

*கட்டண விவரம்:*

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | ரூபா 1,000/- |
| கற்கைநெறிக் கட்டணம் | ரூபா 30,000/- |
| மீளப்பெறக் கூடிய வைப்பு | ரூபா 1,000/- |

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் - பதிவு மேற்கொள்ளும் பொழுது இருபத்திரண்டாயிரம் ரூபாவும், இரண்டாம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுமாக செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளுக்குமான உதவிப்பதிவாளர் பிரிவில் 50/- கட்டணம் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 31.01.2005 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

துணைவேந்தர்.
21.01.2005. (C/40561)(42-21-17-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24 - 02 - 1915 மறைவு 24 - 12 - 2004

தமிழ்மாமணி
அமரர் **அருணாசலம் விநாயகமூர்த்தி**

அன்பே உருவான எங்கள் அன்புத் தெய்வமே! ~ உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்வுகள் நாளை (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக் கரையில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

வீரகத்திப் பிள்ளையார் கோயிலடி,
இமையாணன், உடுப்பிட்டி. (சி-40552)(39-21-17-18)

## ஜப்பான் செல்லக் காத்திருந்த 10 பாகிஸ்தானியர்கள் கைது!

கொழும்பு.ஜன.22

ஜப்பான் செல்வதற்காக இலங்கையில் வீசா இல்லாமல் தங்கியிருந்த பத்து பாகிஸ்தானியர்கள் கல்கிஸையிலுள்ள ஹோட்டலில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை ஜப்பானுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி ஏமாற்றி, கடந்த நான்கு மாதங்களாக இலங்கை முகவர் ஒருவர் ஹோட்டலில் தங்க வைத்திருந்தார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அவர்கள் ஒவ்வொருவரும் தலா மூன்று லட்சம் ரூபா வீதம் முகவருக்கு வழங்கியுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். ஜப்பான் செல்லும் கனவோடு அவர்கள் இலங்கையில் தங்கியிருந்தனர்.

இலங்கைக்கான வீசா முடிவடைந்த நிலையில் இவர்கள் இலங்கையில் தங்கியிருப்பது சட்டவிரோதமான செயல் என்பதாலேயே அவர்களைத் தாம் கைதுசெய்துள்ளனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் விரைவில் பாகிஸ்தானுக்குத் திருப்பியனுப்பப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (கு-க)

## தொழில் இழந்தோர் மட்டக்களப்பில் கவனயீர்ப்புப் போராட்டம்

காத்தான்குடி.ஜன.22

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு தமது தொழில்களை இழந்துள்ள மட்டக்களப்பு மீனவர்கள் மற்றும் அன்றாடம் உழைத்துச் சாப்பிடுவோர் தமது ஜீவனோபாயத்துக்கு வழிகாட்டுமாறும், நிவாரணம் வழங்குமாறும் கோரி நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு நகரில் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராம ரஜ மகா விகாரையின் முன்பாக ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான மக்கள் விகாராதிபதி வண. அம்பிட்டிய சுமணதிஸ்ஸ தேரர் தலைமையில் ஒரு கிலோமீற்றர் தூரம் ஊர்வலமாகச் சென்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாநகரசபைக்கு உட்பட்ட புதூர், சேத்துக்குடா, ஊறணி, வலையிறவு உட்பட பல பிரதேசங்களைச் சேர்ந்த கிராம மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

விகாரையில் ஆரம்பமான கவனயீர்ப்பு ஊர்வலம் திருமலை வீதி வழியாக பார் வீதியைச் சென்றடைந்தது. மண்வெட்டி, கத்தி, கோடரி, மேசன் தொழில் உபகரணங்கள், மீன்பிடி உபகரணங்கள் என்பனவற்றை ஊர்வலத்தில் சென்றவர்கள் எடுத்துச்சென்றனர்.

மக்களின் இந்தப் போராட்டம் தொடர்பாகத் தாம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு தெரிவித்தார் என்று விகாராதிபதி வண.சுமணதிஸ்ஸ தேரர் கூறினார். (கு-க)

## பொதுக் கூட்டங்கள்

குருநகர், ஜன.22

குருநகர், றெக்கிள மேசன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-51)

✪ ✪ ✪

சங்கானை.ஜன.22

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமான வரிப் பரிசோதகர் மேற்பார்வையாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வலிகாமம் தெற்கு, சுன்னாகம் பிரதேச சபை மண்டபத்தில் த.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-202-29)

✪ ✪ ✪

அரியாலை.ஜன.22

யா/சுனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுச்சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு சங்கத்தின் தலைவர் சி. வி.கே. சிவஞானம் தலைமை வகிப்பார். (எ-ரி)

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

லிங்கன் கிறீம் ஹவுஸ், 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு எவ்வித கிளைகளும் கிடையாது. எனவே, சில போலிகள் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி தரக்குறைவான பொருளை விநியோகித்து வருகின்றார்கள். ஆதலால், இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளர்.
(சி-40569)(21-17-18) லிங்கன் கிறீம் ஹவுஸ்.

உ
ஓம் சாயிராம்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 13 - 09 - 1933 மறைவு 24 - 12 - 2004

அமரர் **கணபதிப்பிள்ளை குணசிங்கம்**
(முன்னாள் முகாமையாளர் ஐக்கிய வியாபாரச் சங்கம், முகாமையாளர் இயந்திரம்ஸ், ஓட்டோசப்ளே)

24.12.2004 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் மறைந்த செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்து வந்து எம் வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மலர் வளையம் வைத்து மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

- குடும்பத்தினர்.

44/2, மணல்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (41134)(39-21-17-18)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 19 - 04 - 1982 உதிர்வு 09 - 12 - 2004



செல்வி
## முருகேசு எழிலரசி

வண்ண வதனமும் வந்தெம்மை வாட்டுதம்மா
வடிவழகி எழிலரசி என்றுன்னைக் காட்டுதம்மா
சின்னத் தேர் அசைந்து வருவதுபோல் வந்தவளே
சிரிப்பொலியால் யாவரையும் சீக்கிரமாய் வென்றவளே!

கள்ளங் கபடமற்ற கருணையுள்ளங் கொண்டவளே
கண்ணீரில் மிதக்கின்றோம் காண்பாயோ எங்களை - நீ
வசந்தகாலப் பறவையென வலம் வந்த எழிலரசி
பாருலகம் உள்ளவரை மறப்போமா உன் நினைவை?

எமது அன்புக்குரிய எழிலரசி எம்மைவிட்டுப் பிரிந்த செய்திகேட்டு மருத்துவமனைக்கு நேரில் வந்து அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து தபால், தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் துண்டுப் பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளின் போது மலர்மாலைகள் அணிவித்து, மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் செய்த அன்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (22.01.2005) சனிக்கிழமை எழிலின் 45 ஆவது நினைவுநாளில் கலந்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வி.எம். றோட், பருத்தித்துறை. (41085)(42-17-18) குடும்பத்தினர்.

# தமிழர் பகுதிகளை அரசு புறக்கணிப்பதை அதிகாரிகள் அம்பலப்படுத்த வேண்டும்

## வடமராட்சியில் தளபதி சூசை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.22

காலத்துக்குக் காலம் ஒவ்வொரு விடயங்களிலும் தமிழர் தாயகத்தைப் புறக்கணித்து வருகின்ற அரசு இப்போது சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கும் விடயத்திலும் தமிழர் பகுதிகளைப் புறக் கணித்திருக்கிறது.

அரசின் இத்தகைய புறக்கணிப்பு நடவடிக்கைகளை வெளியுலகுக்கு அம்பலப்படுத்துவதற்கு அரச அதிகாரிகள் முன்வர வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நேற்றுமுன்தினம் மருதங்கேணியில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாந்தோட்டையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா அடிக்கல் நாட்டியிருக்கிறார். ஆனால், வடபகுதியில் இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிகக் குடியிருப்பு வசதிகளைக் கூட வழங்குவதற்கு அரசும் முன்வரவில்லை.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் மீன்பிடித்துறையில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட பங்கினை வகித்தது யாழ்ப்பாணக் குடாநாடு.

ஆனால், கடற்றொழில் அபிவிருத்தியில் அரசு தமிழர் பிரதேசங்களைத் திட்டமிட்டுப் புறக்கணித்ததால் இன்று அந்த நிலை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆழிப் பே[illegible]லை அனர்த்தம் காரணமாக முற்றாக அழி[illegible]பாயுள்ள யாழ்.மாவட்ட மீன்பிடித்துறை[illegible]லைவரும் இணைந்து சரியான முறையில் கட்டியெழுப்பவேண்டும்.

கடந்த 1983 இற்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் கிட்டதட்ட 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட மீன்பிடிப்படகுகள் இருந்துள்ளன. அப்போது 14 மீன்பிடி வலயங்களாக யாழ்.மாவட்டம் பிரிக்கப்பட்டிருந்தது. இதில் 9 வலயங்கள் இப்போது முழுமையாக அழிக்கப்பட்டிருகின்றன.

வடக்கு - கிழக்கில் 3 ஆயிரத்து 785 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடித்துறை சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

கடந்த காலங்களில் ஆய்வுகள் இடம்பெற்றனவே தவிர யுத்த சூழ்நிலையைக் காரணம் காட்டி எந்தவித அபிவிருத்திப் பணிகளும் நடைபெறவில்லை.

மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான உறுதிப்பாடுகள் செய்யப்படவேண்டும். அதாவது, தரையில் இருந்து 100 மீற்றர் உயரத்திற்கு தடுப்பு அணைகளை அமைக்கவேண்டும். இந்தியாவின் கரையோர மாவட்டங்களில் இவ்வாறான தடுப்பு அணைகள் இருந்தமையால் அப்பகுதிகள் பாதிப்புக்குள்ளாகவில்லை.

மீன்பிடியை வளப்படுத்தும் நோக்கில் படகுகளையும் வலைகளையும் வழங்கினால் மட்டும் போதாது. நீண்டநோக்கைக் கருத்திற்கொண்டு பொருத்தமான மீன்பிடிப் படகுகள், படகு கட்டும் நிலையம், சந்தை வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் மருதங்கேணியில் உள்ள உதவி அரச அதிபர் அலுவலகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், எஸ்.கஜேந்திரன், ஈழவேந்தன், கி.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் யாழ். பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர், அனைத்துத் திணைக்களத் தலைவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி களும் இதில் கலந்துகொண்டனர்.



பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் தொழில் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல், கல்வி, சுகாதாரம், வீதி, குடிதண்ணீர் விநியோகம் உட்பட பல்வேறுவிடயங்கள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டது. (து-173-182)



விபத்தில் உயிரிழந்த ஒருவருக்கான ஆயுள் காப்புறுதித் தொகை அண்மையில் இலங்கை ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டது.

விபத்தில் உயிரிழந்த, கல்வியங்காட்டைச் சேர்ந்த அரிஹரசர்மா என்பவருக்கான ஐந்து லட்சம் ரூபா ஆயுள் காப்பீட்டுத்தொகை இரட்டிப்பு மடங்காக - 10 லட்சம் ரூபா - வழங்கப்பட்டது. ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளை முகாமையாளர் வி.இராசரத்தினம் கொடுப்பனவுக் காசோலையை இறந்தவரின் தந்தையிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)

## சுனாமியால் உயிரிழந்த சாவகச்சேரி மக்கள் நினைவாக நடுகைக்கல்

தென்மராட்சி,ஜன.22

முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி கடல் பேரலைகளின் போது பலியான சாவகச்சேரி பகுதி மக்களின் நினைவாக நினைவுக்கல் நடுகை செய்யப்படவுள்ளது.

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி விசேட திருப்பலி இடம்பெற்று கத்தோலிக்க சேமக் காலையில் நினைவுக்கல் நடுகைசெய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய சுற்றாடலைச் சேர்ந்த 83 பேர் முல்லைத்தீவு பகுதியில் சுனாமி கடல் பேரலையில் பலியானமை தெரிந்ததே. (எ-117)

## உள்ளூராட்சி ஓய்வூதியருக்கு ஓய்வூதிய அதிகரிப்பு இல்லை

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய மீளாய்வு செய்யப்படாததால் ஓய்வூதியர்கள் பலர் ஓய்வூதிய அதிகரிப்பினை பெறமுடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. 1996ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வூதிய மீளாய்வு கடந்த ஆண்டு மே மாதம் தொடக்கம் செய்யப்பட்டிருந்தது.

இந்த ஓய்வூதிய மீளாய்வு கொழும்பு உள்ளூராட்சி ஓய்வூதியக் கிளையில் ஓய்வூதியம் பெறுவோருக்கு இதுவரை செய்யப்பட்டு வழங்கப்படவில்லை.

ஓய்வூதிய மீளாய்வு செய்யப்படாததால் கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் வழங்கப்படும் ஓய்வூதிய அதிகரிப்பில் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை

தென்மராட்சி,ஜன.22

சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த வருடம் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலைப்பதிவுகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில்மட்டும் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 145 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் ஜனவரியில் 9 ஆயிரத்து 146 பேரும், பெப்ரவரியில் 7 ஆயிரத்து 982 பேரும், மார்ச்சில் 8 ஆயிரத்து 782 பேரும்,ஏப்ரலில் 7 ஆயிரத்து 549 பேரும், மேயில் 7 ஆயிரத்து 956 பேரும் ஜூனில் 10 ஆயிரத்து 302 பேரும், ஜூலையில் 9 ஆயிரத்து 589 பேரும், ஓகஸ்டில் 8ஆயிரத்து 748 பேரும், செப்ரெம்பரில் 8 ஆயிரத்து 320 பேரும் ஒக்டோபரில் 9 ஆயிரத்து 970 பேரும், நவம்பரில் 8 ஆயிரத்து 812 பேரும்,டிசெம்பரில் 9 ஆயிரத்து 443 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களை விட வைத்தியசாலை விடுதிகளில் 6ஆயிரத்து482 பேர் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் - சலரோகம், பொதுமருத்துவம் ஆகிய 'கிளினிக்'குகளில் 12 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன.

பிரசவ விடுதியில் 275 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் விசர்நாய்களினால் கடியுண்ட 675 பேர் விசர்நாய்க்கடித் தடுப்பூசி மருந்து ஏற்றியுள்ளதாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன. (10-117)

## மதுவரித் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை

### மாவட்ட அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.22

மதுவரித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக அலுவலகப் பணிகளை முன்னெடுக்க முடியாமல் உள்ளது.

யாழ். மாவட்ட மதுவரி அத்தியட்சகர் என். சோதிநாதன் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் திக்கம், நவாலி, வரணி ஆகிய வடிசாலைகளும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மல்லாகம், சங்கானை மற்றும் சாவகச்சேரி ஆகிய மதுவரி நிலையங்களும் செயற்படுகின்றன.

இவற்றில் 23 மதுவரிப் பரிசோதகர்களும் 58 மதுவரிக் காவலர்களும் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும். ஆனால், தற்போது 5 மதுவரிப் பரிசோதகர்களும் 26 மதுவரிக் காவலர்களுமே பணியாற்றி வருகின்றனர்.

அதே போல பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மதுவரி அத்தியட்சகர் அலுவலகத்திலும் உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகத்திலும் எல்லாமாக 6 எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தற்போது இருவர் மட்டுமே அங்கு பணியாற்றி வருகின்றனர்.

இத்தகைய ஆளனிப் பற்றாக்குறை காரணமாக திணைக்களத்தின் பணிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றார். (எ-5)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வியாபார நிறுவனப் பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.22

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் தொடர்பான விவரங்களைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வடமாகாண அலுவலகம் திரட்டி வருகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கைத்தொழில்கள், வியாபார நிறுவனங்கள் தொடர்பான பதிவுகள் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பமாகின. இன்னும் இந்தப் பதிவுகள் பருத்தித்துறையில் தொடர்ந்து இடம்பெறும்.

விவசாயம், கால்நடை வளர்ப்புத் தவிர்ந்த ஏனைய தொழில் முயற்சியாளர்கள் அனைவரையும் பதிவினை மேற்கொள்ளுமாறு கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் வடமாகாணப் பிரதிப்பணிப்பாளர் தெ.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (எ-202)

## கற்றல் செயற்பாடுகளில் சிக்கல் நிலை

கரவெட்டி,ஜன.22

'சுனாமி' அனர்த்தத்தால் பாதிப்புற்ற வடமராட்சிப் பிரதேச மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களுக்குரிய பாடசாலைச் சீருடைகள், பாதணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன இல்லாமையால் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.(10-70)

# பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளில் இன, மத வேறுபாடுகள் இருக்கமாட்டா

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதிலும் பேரழிவுக்குள்ளாகியிருக்கின்ற பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதிலும் இன, மத, பிரதேசவேறுபாடுகள் காட்டப்படமாட்டா.

ஜனாதிபதி தலைமையிலான அனர்த்த முகாமைத்துவ செயலணி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

நேற்றுக் கல்முனைக்கு விஜயஞ்செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர் மக்களுடன் கலந்துரையாடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமிப் பேரலைகளால் வீடுவாசல்களை இழந்தோருக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் பணிகளையும் அவர் ஆரம்பித்து வைத்தார். கல்முனை இஸ்லாமாபாத் கிராமத்தில் இந்த வைபவம் இடம்பெற்றது.

அமைச்சர்கள் நிமால் ஸ்ரீபால டி சில்வா, தினேஸ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப், மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, மஹிந்தானந்த அளுத்கமகே, எம்பிக்களான விமல் வீரவன்ஸ, ஹஸன்அலி, வஸந்த பியதிஸ்ஸ, புவாத் முஸம்மில் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் இந்த வைபவத்தில் பங்குபற்றினர்.

பிரதமர் அங்கு மேலும் கூறியதாவது:-

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகக்குறுகிய காலத்துக்குள் புதிய வீடுகள் நிர்மாணித்துத் தரப்படும். எவருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது. அம்பாறை மாவட்டத்தில் முதற்கட்டமாக 2 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படும். இதற்குப் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களும் உள்ளூர் அமைப்புக்களும் உதவ முன்வந்திருக்கின்றன.

உயிரிழந்தோருக்கான 15 ஆயிரம் ரூபா, அத்தியாவசியப்பொருள் கொள்வனவுக்கான 2 ஆயிரத்து 500 ரூபா என்பன உடனடியாக வழங்கப்படும். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விரைவில் படகுகள், தோணிகள் என்பனவும் வழங்கப்படும். இதற்கான திட்டங்கள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அரசு திட்டங்களை வகுத்துள்ளது. இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதேவேளை, எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

- இப்படிப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கான கொடுப்பனவு 60 ஆயிரம் ரூபா பிரதமரால் வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கு முன்னதாக கல்முனை, மருதமுனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஆகிய இடங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பிரதமர் பார்வையிட்டார். நற்பிட்டிமுனைக் கிராமத்திலும் வீடமைப்புத் திட்டம் ஒன்றை அவர் ஆரம்பித்துவைத்தார். (கு-க)

# மரண அறிவித்தல்

## அமரர் அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை



(ஓய்வுபெற்ற ஆசிரியர், வரையறுக்கப்பட்ட வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட சங்க முன்னாள் தலைவர், சமாதான நீதிவான், பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத் தலைவர், பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கத் தலைவர், பாஷையூர் மீனவ விழிப்புக் குழுத் தலைவர், முன்னாள் விசேட பொலீஸ் அதிகாரி).

யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை கடந்த 18-01-2005 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பிறிஜிற்றின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - எலிசம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான எமிலியானுஸ் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கிறிஸ்தோப்பர், போல்ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் றெமிசியஸ், கனிசியஸ், கமில்டா, றோஸ் லீமா, அன்ரனியஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அலெக்ஸாண்டர், றொச்மன், வலன்ரீனா, றொசீத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் மாதுவி, மகிமா, அன்ரோனியஸ், மக்சியஸ், அலெக்சினி, பஸ்ரியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-01-2005) சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின் யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்ல டக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

46, சென்.செபஸ்தியன் வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கங்கள்: 0777-423519, 0777-033311, 0714-912727.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/40559)(42-18-14)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குணடு. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்குக் கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 222 2867, 3529. (41005)

நிறைகூடிய புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தஞ்செயயப்பட்டது. 1kg 330/= தொடர்பு: விஜயகுமார், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. (41006)

புறொயிலர், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குணடு. தொடர்பு: New R.S.K. Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K. Farm மானிப்பாய் வீதி, பெரியமதவடி, உடுவில். (40011)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செயது தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). அத்துடன், Prima பேட்டுக்குஞ்சுகள் (2-3மாதம் வரை) விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41015)

## மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலருக்கும் மோட்டார் சைக்கிள் வாடகைக்கு வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.:077 6544544, 077 6660177. (40436)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 31.01.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுனாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (40990)

## மேல்மாடி வாடகைக்கு

கஸ்தூரியார் வீதி, வின்சர் சந்திக்கும் பாட்டா சந்திக்கும் இடையில் வீதிப்பக்க மேல்மாடி வாடகைக்குண்டு. தொடர்பு: No: 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0776 - 055157. (41010)

## நாய்க்குட்டிகள் விற்பனை

காவலுக்குரிய அழகான 2மாதம் நிரம்பிய Pure Bred Dobbermann Pincher (Issabella, Blue நிறங்கள) நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக் குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41016)

அல்ஷேஷன், செப்பேட் இனமுடைய நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: "தரன் பற்றி சாச்", ஆனைக்கோட்டை, நவாலி றோட். (41017)

## நூலகத்தில் முதியோருக்குத் தனிப்பிரிவு

தென்மராட்சி,ஜன.22

சாவகச்சேரி நகர சபைப் பொதுநூல் நிலையத்தில் முதியோர்களுக்கென அவர்களின் வசதி கருதி தனியான வாசிப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நூல் நிலையத்தின் வாசிப்பு பிரிவில் முதியோருக்கென தனியான மேசைகள் மற்றும் கதிரைகள் என்பன வைக்கப்பட்டு தினமும் தனியாகப் பத்திரிகைகள் அவர்களுக்குப் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. நூல் நிலையத்துக்குவரும் முதியோர்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றைத் தனியாக உட்கார்ந்திருந்து வாசிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. (எ-117)

## மாணவர்களுக்கு காலை உணவு வழங்கவில்லை

தென்மராட்சி,ஜன.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் ஆரம்பித்து இரண்டு வாரங்களாகியும் இதுவரை மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கபபடாதது குறித்துப் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக இத்திட்டத்திற்குப் பொறுப்பான சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அலுவலருடன் தொடர்புகொண்டபோது மாணவர்களுக்கு வழங்கவேண்டிய உணவுப் பொருள்களின் விவரங்கள் உணவுத்திட்ட இணைப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

உரிய உணவுப் பொருள்கள் வந்ததும் காலை உணவு மாணவர்களுக்கு உடனடியாக வழங்க அனைவரும் தயாராக உள்ளதாகவும் - தெரிவித்தார். (10-117)

## தைப்பூரணை தினவிழா

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கம், கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தைப்பூரணை தினவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இராமகிருஷ்ணமகா வித்தியாலய அதிபர் ச. வாமதேவனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'வீர இளைஞர்களாக விழித்தெழுங்கள்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் ஆன்மீக உரையும் -

'எழுந்திரு! விழித்துக்கொள்!' என்னும் தலைப்பில் சுவாமி விவேகானந்தர் வாழ்க்கை தொடர்பான கண்காட்சியும் இடம்பெறவுள்ளன. (எ -202)


## உடனடி வேலைவாய்ப்பு

அற்லஸ் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் (MOBITAL) ஸ்தாபனத்திற்குக் கீழ்க்காணும் தகுதியுடையோர் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

I எழுதுவினைஞர்

01) க.பொ.த. (சாதாரண) தரத்தில் கணிதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

02) க.பொ.த. (உயர்தரம்) படித்தவராக இருத்தல் வேண்டும் கணனித்துறையில் அனுபவமுள்ளவராகவும் இருததல் வேண்டும்.

03) ஆங்கில அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும் (எழுத, பேசக்கூடியவர் விரும்பத்தக்கது)

II கணனித்துறையில் திறமையுள்ள, 'போட்டோ சொப்' தெரிந்தவர் (Designer) உடன்தேவை.

தகுதியுடைய ஆண், பெண் இருபாலாருக்குமுரியது. தகுதியுடையோர் கீழ்க்காணும் முகவரிக்கு 23-01-2005 அன்று (ஞாயறு) நேரில் சமுகந்தரவும்.

அற்லஸ் (41132)(26-14-17)

No.77, K.K.S. றோட், யாழ்.


## அவசர கலந்துரையாடல்

2002.07.15 இல் பட்டதாரி, ஆசிரிய நியமனம் பெற்ற ஆரம்பக் கல்வி பிரிவிற்கு நியமிக்கப்பட்டவர்களுக்கான அவசர கலந்துரையாடல்.

இடம்: உயர்கல்லூரி, ஆரியகுளம்

காலம்: இன்று (22-01-2005) சனி பிற்பகல் 4 மணி

ஏற்பாட்டாளர் சார்பில்
த.விஜயகுமார்.

(41013)(26-14-17)


## திருமணை கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

★ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
★ விசேட வைபவங்கள்
★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நீள்ள கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22,சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P 077-3086939, 0777-246117, 077-6018467. (41091)(46-14-17-26)


## யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி)

### பழைய மாணவர் சங்கம்

### பொதுச்சபைக் கூட்டம் - 2005

தலைவர்: திரு.சி.வி.கே.சிவஞானம்
நாள்: நாளை (23-01-2005) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 16.00 மணி
இடம்: வித்தியாலயப் பிரதான மண்டபம்

☞ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகமளித்து, பாடசாலையின் உயர்ச்சியில் பங்களிப்புச் செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாகம் 2004

சி.வி.கே.சிவஞானம் தலைவர் | திருமதி ச.பரமேஸ்வரன் பொருளாளர். | திரு.பூ.குகதாசன் செயலாளர்.

(26-14-17) (41137)

## ஒத்துமாறல்

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்கு உதவும் அமைச்சில் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவில் கொழும்பில் பயிற்சி பெறுபவர் யாழ்.மாவட்டத்தில் ஆசிரியத் தொழிற்பயிற்சி பெற்று வருபவருடன் ஒத்துமாற விரும்புகிறார். உடன் தேவை.

தொடர்புகளுக்கு: 077 - 6150086
021 222 3763
021 222 6708

(41008)


## நாளை பரீட்சை இன்றே இலவச அனுமதிகளை பெற்றிடுங்கள்

Mega

கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை

23-01-2005 ஞாயிறு

இலவச அனுமதிகளுக்கு

ASIAN COMPUTERS

• யாழ்ப்பாணம் • சுன்னாகம் • சாவகச்சேரி • நெல்லியடி • கிளிநொச்சி


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




லண்டனில் வசிக்கும்
மதியழகன் – பிரமிளா
தம்பதியினரின்
செல்வப் புதல்வன் பிரவின்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (22-01-2005) சனிக்கிழமை தனது லண்டனிலுள்ள இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, பாசமுடன் அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, பிரியமுடன் பெரியப்பாமார், பெரியம்மாமார், ஆசையுடன் அத்தைமார், மாமாமார், சித்திமார், சித்தப்பாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் அயலிலிருக்கும்அன்புஉள்ளங்கொண்ட அனைவரும் லண்டன் ஸ்ரீமுத்துமாரியம்மன் அருளால் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் நல்லோர் போற்றும் நற்பண்பாளனாகத் திகழவேண்டுமென உளம் கனிந்து வாழ்த்துகின்றனர்.

லண்டன்.

பெற்றோர்
மதியழகன் – பிரமிளா
(அண்ணா சிலையடி, கரணவாய், கரவெட்டி)

(40556)(42-14-17-26)

## உ சிவசக்தி துணை



கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி.

பழைய காளி கோயில்

### ஸ்ரீமஹா காளி அம்பாள் தேவஸ்தானம்

மைசூரிலிருந்து வந்திருக்கும் மஹாகாளி அம்பாளுக்கும், காசியிலிருந்து வந்திருக்கும் காசீஸ்வரருக்கும், பரிவார மூர்த்திகளுக்கும்.

### மஹா கும்பாபிஷேகம்

★ 23.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.05மணி முதல் 10.50மணி வரை. (புதிய நேரங்கள்)
★ கிரியைகள் ஆரம்பம் 19.01.2005 காலை 6.45 மணி.
★ பக்தர்கள் எண்ணெய்க்காப்பு 22.01.2005 காலை 6.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை. (புதிய நேரங்கள்)
★ தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

இறைபணியில்
பழனியப்பா, பொன்னுத்துரை, சந்திரசேகரம்பிள்ளை, கனகசிங்கம் குடும்பங்கள்.

(C/40428)

## சமையல் வேலைக்கு ஆள் தேவை

★ சமையல்காரர்
★ சமையல் உதவியாளர்
★ ரீ மேக்கர்
★ ரொட்டி மேக்கர்
★ சுவீற் மேக்கர்
★ சப்பிளையர்

தொடர்பு: திறீ ஸ்ரார் ஹொட்டல்
இல. 162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-40570)

## நயினாதீவில் மத்தி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி (வைரவர்) தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம்

கிரியாகால விபரம்

❖ கர்மாரம்பம்: தை 10ஆம் நாள் (23-01-2005) ஞாயிற்றுக்கிழமை
❖ எண்ணெய்க்காப்பு: தை 13ஆம் நாள் (26-01-2005) புதன்கிழமை
நேரம்: காலை 9 மணி மாலை 4 மணி வரை
❖ மஹாகும்பாபிஷேகம்: தை 14ஆம் நாள் (27-01-2005) வியாழக்கிழமை
நேரம்: காலை 10 மணி முதல்

நயினாதீவில் மத்தி.
நிர்வாகி
ச.யோகேஸ்வரசர்மா.

(41136)


## அற்லஸ் சொகுசு பஸ் சேவை

22/01/2005 தொடக்கம் தினசரி பஸ்சேவை

உங்கள் நோக்கம் எங்கள் சேவையே!!!

பருத்தித்துறை - மந்திகை - நெல்லியடி - யாழ்ப்பாணம் ஊடாக - திருகோணமலைக்கான சொகுசு பஸ்சேவை நடைபெறுவதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தங்கள் பதிவுகளை மேற்கொள்வதற்கு

கஜேந்திரா ஏஜென்சி
இல. 329 B, பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொலைபேசி இல.: 021 2263928
காலை 06 மணிக்குப் புறப்படும்.

ஸ்ரீ அம்பாள் கொமினிகேசன்
சாவகச்சேரி றோட் (சிலையடி),
மந்திகை - புலோலி.
தொலைபேசி இல.: 021 226 3111
060 221 2633
காலை 06.30 மணிக்குப் புறப்படும்.

போன் சொப்
பிரதான வீதி,நெல்லியடி.
தொலைபேசி இல: 021 226 3770.
0777 570110
காலை 7.00 மணிக்கு புறப்படும்.

அற்லஸ் கொமினிகேசன்
இல: 77, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 2597,
021 222 2990
காலை 8.30 மணிக்குப் புறப்படும்.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான பதிவிற்கு,
கிரபிக் வீடியோ வேல்ட்
இல: 164, ஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை, T.P: 0777 21302
திருகோணமலையிலிருந்து காலை 7.00 மணிக்குப் புறப்படும்.

(41133)(38-14-17-26)

# பிரேதங்களின் மேல் நின்றுகொண்டு ஜனாதிபதி தனது அதிகாரத்தை நீடிக்கப் பார்க்கிறார்

கொழும்பு,ஜன.22

பிரேதங்களின் மேல் நின்றுகொண்டு தனது அதிகாரத்தை மேலும் ஐந்து வருடங்களுக்கு நீடிக்கும்படி கேட்கின்றார் ஜனாதிபதி. இன்னும் ஐந்து வருடங்களுக்குத் தேர்தலே நடைபெறாது என்று அவர் கூறுவது ஜனநாயகத்திற்கே விடுக்கும் அச்சுறுத்தலாகும் என நெருப்பெடுக்கின்றார் ஐ.தே.க.பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாந்தோட்டையில் புதிய நகரம் அமைக்க ஜனாதிபதி அடிக்கல் நாட்டியுள்ளார். ஆனால் பாதிக்கப்பட்ட அப்பிரதேச மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மக்கள் விரும்பாத இடங்களில் அவர்களைப் பலவந்தமாகக் குடியமர்த்தக்கூடாது. மக்களின் விருப்பம் அறிந்து வீட்டைக் கட்டிக்கொடுக்க வேண்டும்.

மக்களின் விருப்பத்தை உதாசீனப்படுத்தியமை போலவே அரசமைப்பையும் உதாசீனப்படுத்துகின்றார் ஜனாதிபதி. அரசமைப்பின்படியும்; நாட்டு மக்கள் அளித்த தீர்ப்பின்படியும் தன்னுடைய பதவிக்காலம் எதுவரை என்பது ஜனாதிபதிக்கே நன்கு தெரியும்.

ஆனால், சுனாமி அனுதாபத்தைக் காட்டித் தனது அதிகாரக் காலத்தை நீடித்துக்கொள்ள முனைகின்றார். அவர் இனிமேல் ஐந்து வருடங்களுக்கு தேர்தலே நடைபெறாது என்று கூறியிருக்கின்றார். இது ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல் மட்டுமல்ல, ஜனநாயகத் துரோகமும் கூட.

நாடு பற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டதுபோல் இருக்கின்றது ஜனாதிபதியின் செயல். அவரது கூற்றுப்படி அநாதரவான மக்களுக்கு நிவாரணம் வழங்க இன்னும் ஐந்து வருடங்கள் தேவை என்கிறாரா? அதற்குள் அகதிமுகாம்களில் இருப்பவர்கள் அனைவரும் செத்து மடிந்துவிடுவார்கள். அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டாத ஜனாதிபதி அதிகாரத்தை நீடித்துக்கொள்வதில் தான் முனைப்பாக நிற்கின்றார். உரிய நேரத்தில் நடத்தவேண்டிய தேர்தல்களை நடத்தாவிட்டால் ஐ.தே.கவும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்க்க முடியாது என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (எ.க)

## பன்னிரு திருமுறை பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்தப்பட்டு வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் என்பன நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி உக்கனை ஸ்ரீ விநாயகர் ஆலயத்திலும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வண்ணார்பண்ணை குளங்கரை ஸ்ரீ காமாட்சிஅம்மன் ஆலயத்திலும் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். தொடர்ந்து மாகேசுர பூசையும் இடம்பெறும். (எ)

## கணனிக் கற்கைநெறிக்கான புலமைப்பரிசில் பரீட்சை

'ஏசியன்' கணனி நிறுவனம் கணனிக் கற்கை நெறிகளுக்காக நடத்தும் மெகா புலமைப்பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

பரீட்சைக்கான இலவச அனுமதிகளை யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள ஏசியன் கல்வி மையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பரீட்சை நிலையங்களில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8)



கைதடி மத்தியிலுள்ள மூர்த்தியாவத்தை விவசாய வீதி, சமுர்த்தி அதிகாரசபையின் நிதியுதவியுடனும், அப்பகுதி மக்களின் பங்களிப்புடனும் அண்மையில் புனரமைக்கப்பட்டது. இந்த வீதியை சிரமதான முறையில் புனரமைக்கும் பணியில் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய அங்கத்தவர்களும் மற்றும் பொதுமக்களும் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: கைதடிச் செய்தியாளர்)

## சேவாலங்கா நிறுவனம் உலர் உணவு உதவி

புதுக்குடியிருப்பு,ஜன.22

சுனாமியால் பாதிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகர் பிரிவில் தங்கியுள்ள 400 குடும்பங்களுக்கு சேவாலங்கா நிறுவனம் உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 20 கிலோ அரிசி, 10கிலோ கோதுமை மா, 3 கிலோ சீனி உட்படப் பல பொருள்கள் வழங்கப்பட்டன.

இப்பொருள்கள் யாவும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-353-204)

## 'எச்சத்திலும் எழுவோம்' ஆற்றுகை நிகழ்வு

புதுக்குடியிருப்பு,ஜன.22

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீண்டும் தட்டியெழுப்பி, அவர்களின் உளவியல் பாதிப்புக்களை அகற்றி நிஜ வாழ்வுக்குக் கொண்டு வருவதற்கான 'எச்சத்திலும் எழுவோம்' என்னும் ஆற்றுகை நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி காலை 8.50 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரங்கச்செயற்பாட்டுக் குழுவினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இயற்கை அனர்த்தம் ஏற்பட்டதன் 31 ஆம் நாள் நினைவாக இந்நிகழ்வு நடைபெறுகின்றது.

இந்த ஆற்றுகை நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகள், உளவியற் கருத்தரங்குகள் என்பன உட்படப் பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை ஆறுதல்படுத்தும் இந்நிகழ்வில் முல்லைத்தீவு கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள். (8-353)

## பல குடும்பங்களை காணவில்லை

முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் பல குடும்பங்கள் காணாமற் போயுள்ளதாக அவர்களின் உறவினர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

அனர்த்தம் நடைபெற்று பலநாள்கள் கடந்துவிட்ட நிலையிலும் தமது உறவினர்களின் குடும்பங்கள் பல இதுவரையும் கிடைக்கவில்லை எனவும், இவர்கள் ஆழிப்பேரலையால் இறந்துவிட்டார்களா அல்லது வேறு எங்காவது இடம்பெயர்ந்து இருக்கிறார்களா என்பதை அறியமுற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

காணாமற் போனவர்களின் உறவுகள் அவர்கள உயிருடன் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு நலன்புரி நிலையமாகத் தேடி அலைகின்றனர். (8-203-341)

## பதிவாளர் அலுவலகம் மாவட்ட செயலகத்தில்

புதுக்குடியிருப்பு,ஜன.22

சுனாமி பேரலையின் தாக்கத்தினால் முற்றாக அழிந்த முல்லைத்தீவு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இயங்கவுள்ளது.

இவ்வலுவலகத்தில் இருந்த பதிவுப் புத்தகங்கள் யாவும் அழிந்துவிட்டமையால் தற்போது இறப்பு, பிறப்பு மற்றும் பதிவுகளை பெற முடியாதுள்ளது.

ஆனால், சுனாமி நடவடிக்கையால் இறந்தவர்களின் பதிவுகள் முள்ளியவளையிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் பதியப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன,

பொதுமக்கள் தம் தேவைகளுக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மாவட்டச் செயலகத்துடன் தொடர்புகொள்ளலாம் எனப் பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (8-353)

## முல்லைத்தீவு நகரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை

முல்லைத்தீவு,ஜன.22

முல்லைத்தீவு நகரை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லை நகரில் சுனாமிக்கு முன்பு இயங்கிய அரச அலுவலகங்களில் மாவட்டச் செயலகம், மாவட்ட வைத்தியசாலை, பிரதி மாகாண சுகாதாரப் பணிமனை, இலங்கைவங்கி என்பனவும் முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் இயங்கத் தொடங்கியுள்ளன.

அத்துடன், முற்றாக அழிவடைந்த சில கட்டடங்களில் தனியார் கடைகள் இயங்குவதையும் காணமுடிகிறது.

தமிழீழப் போக்குவரவுக் கழகத்தின் பஸ் சேவையும் இடம்பெற்றுவருகிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் மீட்புப் பணி துரிதமாக இடம்பெற்றுவருகிறது. இந்த நடவடிக்கைகளில் கடற்புலிகளும், 'மக்' நிறுவனத்தினரும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் ஒழுங்கமைப்புடன் பாதிக்கப்பட்டோருக்கான இடைத்தங்கல் முகாம்கள் பாதுகாப்பான இடங்களில் அமைக்கப்பட்டு வருவதையும் காணமுடிகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமிப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான உளநல சிகிச்சை மற்றும் கலந்துரையாடல்கள் என்பனவும் அது தொடர்பான ஆற்றுகை நிகழ்வுகளும் இடம்பெற்றுவருவதையும் அவதானிக்க முடிகிறது. இந்த நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஈடுபட்டு வருகின்றனர். (10-353-ரி)

## மாணவன் கௌரவிப்பு

கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்கக் கிளையினரால் நடத்தப்பட்டு வரும் முன்பள்ளிகளிலிருந்து 2005 ஆம் ஆண்டு தரம் - 01 இற்குச் செல்லவுள்ள மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த மாதம் நடைபெற்றது.

கிளிநொச்சியிலுள்ள முன்பள்ளி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலாளர் க.கணேஸ் தலைமையிலும் - ஸ்கந்தபுரம் மணியங்குளம் ஆகிய முன்பள்ளி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை செஞ்சிலுவைச்சங்க மாவட்டக் கிளையின் நிறுவன இணைப்பாளர் வே.விஜயரட்ணம் தலைமையிலும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன், பெற்றோர்கள் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். (8-405-204)




## வீடமைப்பு அதிகார சபையினர் சுனாமி அழிவுகளைப் பார்த்தனர்

புதுக்குடியிருப்பு,ஜன.22

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் கடந்த வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டனர்.

இனிவரும் காலங்களில் வீடுகள் கடலிலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைக்கப்பட வேண்டும். என்பது தொடர்பான ஆலோசனைகள் இவர்களால் வழங்கப்பட்டன.

தென் பகுதியில் வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டபோது. வடக்கில் அழிந்த வீடுகள் அமைப்பது பற்றிய ஆலோசனைகளை வழங்கியமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(8-353-204)





## முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு மேலும் 14 பட்டதாரிகள் நியமனம்

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு மேலும் 14 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் முல்லைத்தீவுக் கல்வி வலயத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில் இவர்கள் தங்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நியமனம் வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:

எல்.பிரேமானந் (42, கண்டி வீதி, சுண்டுக்குளி), எஸ்.சிவசிறி, (90,ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி), கே.செல்வராசா (19, கொண்டலடி ஒழுங்கை, நல்லூர்), பி.பால மகிந்தன் (பொற்பதி வீதி, கொக்குவில), வி.தயாபரன் (84/2,அரசடி வீதி, யாழ்ப்பாணம்), கே.பாலமுருகன் (186,கோயில் வீதி, நல்லூர்), ஆர்.சிவரூபி (சேருக்காபுரம், தெல்லிப்பளை), எம்.தக்ஷினி (முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம்), கே. கோமளாதேவி (நாவற்குழி மேற்கு), எஸ்.சசிகலா (ஆராய்ச்சியார் வளவு, சுதுமலை), எஸ்.சிவரஞ்சினி (தொலபுரம் கிழக்கு), எல்.கீதா (மூளாய் வீதி, வட்டு. தெற்கு), ஜே.மோகனா (பண்ணாகம் தெற்கு), ரி.சிவதர்சினி (மாரியம்மன் வீதி,திருநெல்வேலி). (8)

# சிறி கருமாரி நகையகம்
யாழ்ப்பாணம்.

## முகவரி மாற்றம்



தற்போது யாழ்ப்பாணம், இல.177D, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவரும் எமது நிறுவனம் தாரண வருடம் தை மாதம் 9 ஆம் நாள் (22.01.2005) சனிக்கிழமை பழைய நேரப்படி காலை 7.36 முதல் 8.36 வரை வரும் மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் இல.205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம் - யாழ்ப்பாணம் என்னும் புதிய முகவரிக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டு அங்கு மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அத்தருணம் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**சிறி கருமாரி நகையகத்தினர்**

205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.

(41139)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1932 – 02 – 09 | மறைவு 2004 – 12 – 23

## திருமதி தெய்வானை கிருஸ்ணபிள்ளை

எம் இதயத்தின் நாதம் ஓய்ந்தது
எம் தெய்வத்தாயே! எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
நீ நீண்ட பயணம் சென்றதேனோ?
தெய்வமாய் நின்று எம்துயரைத் துடைப்பாயம்மா!

எங்கள் பெரியதாயாரின் பிரிவுத்துயரில் கலந்து கொண்டு அனுதாபச் செய்திகளை அனுப்பி துயர் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து அனைத்து உதவிகளும் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (22.01.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புலோப்பளை மேற்கு,
பளை.

சகோதரி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(41006)(41-15-16)

# மரண அறிவித்தல்கள்

## முத்து துரைராஜா



வராகியம்மன் வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த முத்து துரைராஜா பிரான்ஸில் 18.01.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் துரையம்மாவின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), அமுதா (பிரான்ஸ்), வசந்தி, ஜோதிராஜா (ஜேர்மனி), ஆனந்தராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சியாமளா (ஜேர்மனி), பெடிக், சுமந்திரன் (பிரான்ஸ்), பிறேம்குமார் (யாழ்.பல்கலைக்கழகம்), மேசி (ஜேர்மனி), குமுதா (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2005) சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராகியம்மன் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(41033)

தகவல்:
பி.வசந்தி
(மதி - மகள்).

## மனவல் சவரிமுத்து (நாட்டுக் கூத்துக் கலைஞர்)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனவல் சவரிமுத்து அவர்கள் 18.01.2005 செவ்வாய கிழமை அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான மனவல் - ஆனந்தம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியோகு - மரியாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும் புஸ்பம், செல்வராணி, ராசாத்தி (பிரான்ஸ்), லலிதா, யேசுதாசன் (பிரான்ஸ்), விக்ரர் ஆகியோரின் அன்புத் தந்தையும் பெரியதம்பி, லோரன்ஸ், றொபேட் (பிரான்ஸ்), றஞ்சிதன், ராதிகா (பிரான்ஸ்), பிறேமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சவிரியாச்சி, அந்தோனியாள், அற்புதம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற றோசம்மா, காலஞ்சென்ற அன்னம்மா, யேசுதாசன், ஸ்ரனிஸ்லோஸ் (கனடா), காலஞ்சென்றவர்களான கிருத்தோ, விசேந்தி, அந்தோனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரவி, ராதிகா, கலா, றாய,, றாஜினி, றொசான் (பிரான்ஸ்), றொக்கி (பிரான்ஸ்), விதுசா, வினோத், வினோதினி, பிரசாந் (பிரான்ஸ்), ஜெனி(பிரான்ஸ்), சோதி (பிரான்ஸ்), வின்சியா, சானுஸா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல நல்லடக்கத்துக்காக அவரின் இல்லத்தில் இருந்து இன்று (22.01.2005) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு புனித இராயப்பர், சின்னப்பர் தேவாலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதன் பின் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நாராந்தனை,
ஊர்காவற்றுறை.

(41007)(41-15-16-12)

தகவல்:
பிள்ளைகள்.


## சிங்களம்

பேச, எழுத, வாசிக்க SAT., SUN. 5.30p.m.

**Mr.E.S.Piyadasa**

(Sinhala Trained)

**SHAMROCK**

J/Eachchamoddai Rd.

(41034)


# மரண அறிவித்தல்

## தவசி பாக்கியம்



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மருதனார்மடம், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தவசி பாக்கியம் நேற்றுமுன்தினம் (20.01.2005) வியாழக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதனார்மடம்,
உடுவில்.

(41036)

தகவல்:
க.பாலன் (மகன்).


## நிரஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன் (இருவேடம்) லைலா
வடிவேல் நடித்த ஜெய் சூர்யா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00. (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
ANACONDA - 2 இரவு 8.45



(C/39654)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல்,
மஞ்சுளி நடித்த
ஆய்தம்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)



## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா (சில்ஸ்) இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
கமலஸ், ஸ்ரீதேவி, கருணாஸ்,
கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)

(C/39654)

சிவமயம்

## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**

44,42,பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (41019)(42-15-16)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வாமதேவா காவேரி அம்மா (கமலம்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காவேரிஅம்மா (கமலம்) நேற்று சிவபதமடைந்து விட்டார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ரஞ்சனா, சுலோச்சனா, சிவகுமார் (பிள்ளைகள்). T.P.4591402 (41038)

## திருமதி சரவணபவானந்தன் இராஜராஜேஸ்வரி



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் 2ஆம் துண்டு, அக்கராயன் குளம், கிளிநொச்சியில் வசித்து வந்தவருமான திருமதி சரவணபவானந்தன் - இராஜராஜேஸ்வரி 21.01.2005 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் இராயலிங்கம் - பரிபூரணம் தம்பதிகளின அன்பு மகளும் சரவணபவானந்தன் (கண்ணன்-ஆசிரியர், அக்கராயன் மகா வித்தியாலயம்) அவர்களது அன்பு மனைவியும் திருமகள் (மன்னார்), திருக்குமரன் (உரும்பிராய்), திருவேணி (உரும்பிராய்), கலைமகள் (லண்டன்), கமலவண்ணன் (உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நந்தகஜேந்திரன் (இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மன்னார்), தர்சினி, யோகேஸ்வரன் (யாழ்பல்கலைக்கழக உடற்கல்வி இறுதியாண்டு), சிவதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மாணிக்கதேவி, அம்பிகாதேவி, ஞானகலை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2005) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.
தொலைபேசி: 021-4590029
(41014)(42-15-16)

தகவல்:
சரவணபவானந்தன் (கண்ணன் - கணவர்),
ச.திருக்குமரன்
ச.கமலவண்ணன் } மகன்மார்.

## திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம்

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம் 17.01.2005 திங்கட்கிழமை பிரான்சில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் திருமதி கேமராணி, திருமதி கேமலதா, திருமதி கேமரஞ்சினி, திருமதி கேமநளினி, கேமச்சந்திரன், திருமதி கேமதயாளினி, திருமதி கேமசுபோதினி, திருமதி தனுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும் நகுலராஜா, அமரர் தயாநிதி, மருதரத்தினம், சிவபாலன், திருமதி இசபெல், அருணவிஷயம், யோகன், மதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆறுமுகதாஸ், அமரர் வரதராஜா, செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் முருகையா, ஞானி, சதீஸ், திருமதி இராசம்மா, திருமதி இராசமலர், திருமதி சொர்ணமலர், திருமதி கமலி, திருமதி ரேக்கா, திருமதி லோஜி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

பிரான்ஸ் T.P.No.
139843995-625488046-661867697
619932532- 615409596-609316499
00331-48687126,00331-48219257,
00331-39843995.

தகவல்:
இராசையா செல்வராஜா,
முருகமூர்த்தி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(41020)(42-15-16)

## நடராசா வாமதேவன்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா வாமதேவன் அவர்கள் 20-01-2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பாகியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இலட்சுமிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கோமளாதேவி மற்றும் பஞ்சாடசரம், பஞ்சலட்சுமி, செல்வலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்தவமூர்த்தியின் அன்பு மாமனாரும் சௌமிகன், பிரியங்கன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற திருமதி சடாச்சரம் சிவபாக்கியம் மற்றும் திருமதி தில்லைநாதன் தில்லைராஜேஸ்வரி, சிவராசா, இராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி தன்மாவரதர் சரஸ்வதி, காலஞ்சென்ற விஸ்வநாதன் மற்றும் சிறீகாந்தன், காலஞ்சென்ற சடாச்சரம், தில்லைநாதன், பத்மினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21-01-2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஊத்தல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு. (41022)(41-15-16)

தகவல்:
பிள்ளைகள், மருமகன்.

## கணபதி நாகலிங்கம்



ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகலிங்கம் அவர்கள் 20.01.2005 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சண்முகலிங்கம் (மாவட்ட நீதிமன்று - மல்லாகம்), செல்வரஞ்சிதம் (டென்மார்க்), நவறட்ணலிங்கம் (சின்னராசா), லோகநாதன் (மகான்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 11 மணியளவில் அள.மல்லாகம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(41025)(42-12-15-16)

தகவல்:
பிள்ளைகள்.

# மீட்புப் பணிகளுக்கு உதவியாக 25 நவீன தொலைத்தொடர்புக் கருவிகள்

## இன்ரர்போல் வழங்கியது

மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் இலங்கைப் பொலீஸாருக்கு சர்வதேச பொலீஸ் (இன்ரர்போல்) 25 தொலைத்தொடர்புக் கருவிகளை வழங்கியுள்ளது.

லண்டன் மெட்ரோ பொலிட்டன் பொலீஸ் அமைப்பின் ஊடாக இந்தத் தொலைத்தொடர்புக் கருவிகள் நேற்று பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டன.

மெட்ரோ பொலிட்டன் பொலீஸ் அமைப்பின் இன்ஸ்பெக்டர் செரிஸ் ரம்சேய், கான்ஸ்டபிள் செரிஸ் ரோடா, பிரித்தானிய தூதரகத்தின் அதிகாரி ராபியா செலுத்ரி ஆகியோர் பொலீஸ் தலைமையகத்தில் வைத்துத் தொலைத்தொடர்புக் கருவிகளை பொலீஸ் மா அதிபரிடம் வைபவ ரீதியாகக் கையளித்தனர்.

சுமார் ஐம்பது கிலோமீற்றர் பரப்புக்குள் ஒருவரையொருவர் தொடர்புகொள்வதற்கான சிறந்த தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் தொடர்பு சாதனங்களையே சர்வதேச பொலீஸ் அமைப்பும் பயன்படுத்துகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச பொலீஸ் அமைப்பு இந்தத் தொடர்பு சாதனங்களை இலங்கைப் பொலீஸாருக்கு வழங்கியமைக்கு பொலீஸ்மா அதிபர் நன்றி தெரிவித்தார். காணாமற்போன மற்றும் கொல்லப்பட்ட வெளிநாட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் இன்டர்போல் உதவவேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (து-க-5-12)

## ஊழல் விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது தடவையாக சபையால் சிபாரிசு செய்யப்பட்டவர்கள் தொடர்பாக ஜனாதிபதி எந்தவிதமான பதில்களையும் அனுப்பவில்லை.

இப்போது மூன்றாவது முறையாக மூவர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில வருடங்களாக லஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக்குழு செயற்படாததினால் பெருந்தொகையான முறைப்பாடுகள் கிடப்பில் இருக்கின்றன. ஆணைக்குழு செயற்பட தாமதமானால் மேலும் சிக்கல்கள் ஏற்படும் என லஞ்சத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணசிங்க தெரிவித்தார். (ஐ-க)

## சர்வதேசத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றியும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்து விளக்குவது குறித்து ஆராய்ந்தோம்.

*கேள்வி:* இந்தியாவிலிருந்து கிடைக்கும் உதவிகள் தொடர்பாக தங்களுடைய கருத்து என்ன?

*பதில்:* பொதுவாகவே அனைத்து உதவிகளும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இது இலங்கை அரசின் ஊடாகச் சரியாகப் பகிரப்படுமா என்பது ஒரு சந்தேகமான விடயமே. தமிழ் மக்களுக்கும் இப்படியான சந்தேகம் உள்ளது. ஏனெனில் அண்மைக் காலத்தில் இலங்கை அரசின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் மத்தியில் பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளன.

*கேள்வி:* சனியன்று நடைபெறவுள்ள நோர்வேத் தரப்பினருடனான சந்திப்பு எப்படி அமையும்?

*பதில் :* பாதிக்கப்பட்ட நமது தேசத்துக்குரிய, நமது மக்களுக்குரிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ள கலந்துரையாடல் இது. ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாக அமையும்.

*கேள்வி:* ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதியின் நிலைமை எவ்வாறு உள்ளது?

*பதில்:* உடனடி மனிதாபிமானப் பணிகளை மக்களின் ஆதரவுடனும், சர்வதேச சமூகத்தின் உதவியுடனும் புலம்பெயர்ந்துள்ள சமூகத்தின் பங்களிப்புடனும் திருப்திகரமாக முன்னெடுத்து வருகின்றோம். எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நாம் சர்வதேச சமூகத்திடம் உதவி கோரியுள்ளோம். அரசினது உதவி ஓரளவு கிடைத்தாலும், அது திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இல்லை என்றே கூறவேண்டும்.

தமிழர் தாயகப் பகுதியை அரசு ஏற்கனவே பாகுபாடு காட்டி புறக்கணித்துத்தான் பல்வேறுபட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது - என்றார் அவர். (து-க-12)

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலமணிநேரம் அவர்கள் அங்கு தங்கியிருந்தனர். பாலசிங்கம் தம்பதியருக்கு மதிய உணவும் அங்கேயே வழங்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து புறப்பட்ட பாலசிங்கம் தம்பதியர் மதியம் 1.45 மணியளவில் கிளிநொச்சியை சென்றடைந்தனர்.

தாயகம் வந்தடைந்த அன்ரன் பாலசிங்கத்தை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், தமிழீழ நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா ஆகியோரும் புலிகளின் துறைப் பொறுப்பாளர்கள், போராளிகளும் வரவேற்றனர். (ஐ-க)

## வன்னி வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குப் பொதுக் கட்டமைப்பு ஒன்று தேவை என்பதை நோர்வேயிடம் வலியுறுத்துவோம்" - என்றார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது :-

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நோர்வே வெளி விவகார அமைச்சர் இன்று முக்கிய சந்திப்பொன்றை நடத்தவுள்ளார். அதற்கு முன்னர் குறிப்பிடத்தக்க கருத்துக்கள் எதனையும் வெளியிடமுடியாது. சந்திப்பின் பின்னரே பெறுமதியான கருத்துக்களை வெளியிடமுடியும்.

இயற்கை அழிவு தமிழ் மக்களுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அழிவுகள் தொடர்பாக சர்வதேசம் நல்ல உதவிகளைச் செய்துள்ளது. உதவிகள் சமமாகப் பங்கிடப்படாதமை குறித்து நாம் கவலையடைந்துள்ளோம்.

ஆகவே, இது தொடர்பாக நோர்வே அனுசரணையாளருடன் முக்கிய கலந்துரையாடலை நடத்தவுள்ளோம். நிவாரணப் பணிகளுக்கென ஒரு பொதுக் கட்ட மைப்பு உருவாக்கப்படவேண்டும் என்றார். (ஐ-க)

## நோர்வே அமைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது என்று ஜனாதிபதி விளக்கினார். அனைத்து அரசியல் கட்சிகள், விடுதலைப் புலிகள் இயக்கம், அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமூக அமைப்புகள் என்பவற்றுடன் கலந்துரையாடப்பட்ட பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படவேண்டிய உதவி, நிவாரண நடவடிக்கைகள் மற்றும் மீள் கட்டுமானப் பணிகள் பற்றி புள்ளிவிவரங்கள், திட்டங்கள், முன்மொழிவுகள் என்பவற்றை தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் பணிப்பாளர் மனோ தித்தவெல மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல் ஆகியோர் நோர்வேத் தூதுக் குழுவினருக்கு விளக்கினர். இப்பணியை நிறைவு செய்வதற்கான தேவைகள், ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டது தொடக்கம் இதுவரை பாரபட்சமின்றி நிவாரண, மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை, வடக்கு - கிழக்கையும் மீளக் கட்டி எழுப்புவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள மூலவளங்களின் கணிசமான பங்கு ஆகியவை குறித்தும் இந்த விளக்கத்தின் போது விவரிக்கப்பட்டது.

ஆழிப்பேரலையால் தெற்கு மற்றும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தாம் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர் என்று நோர்வேக் குழுவினர் தெரிவித்தனர் என ஜனாதிபதி செயலகச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் செயலாளர் எஸ்.கருணாரட்ன, அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, வெளிவிவகார அமைச்சு செயலர் எஸ்.பாலிக்ககார, புனர்நிர்மாணத்துறை அமைச்சுச் செயலர் எஸ்.ஜெயசிங்க, பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர் திலக்ரணவிராஜா மற்றும் மூத்த அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-க-12)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 10 - 08 - 1915



இறப்பு 23 - 12 - 2004

### அமரர் தம்பு செல்லையா

*23.12.2004 ஆம் நாள் காலமான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (22.01.2005) சனிக்கிழமை 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இல.: 75, பழம் வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (சி-40584)(30-11-45)

ஜே.டீ.மோசஸ் றீற்றா.

## மலிவு விற்பனை பிற்போடப்பட்டுள்ளது

கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற இருந்த மலிவு விற்பனை சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது. மலிவு விற்பனை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மெதடிஸ்த ஆலய நிர்வாகம்,
கட்டைவேலி. (c/40571)

## தேவை

ஓட்டோ ஓட்டுநர் வாகன அனுமதிப் பத்திரத்துடன் தேவை.
(மாநகரசபைக்கு உட்பட்டவர்)

தொடர்பு:

ஏசியன் தளபாடம்
133, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகில்)
யாழ்ப்பாணம்.
T.P.: 0777-536108 (c/40566)

## இலவசக் கருத்தரங்கு

நாளை (23.01.2005)
மாலை 3.00 மணிக்கு
IPAS
பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-40586)

## மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்



IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

IDD 25/= மட்டும்

ஒரு வருட உத்தரவாதம் உண்டு

கையிருப்பு உள்ளவரை

14,000/= மட்டும்



| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம். மேலதிகவிவரங்களுக்கு:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

Office: இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 7070, 0712 399 220, 0777 281 521.

Shop: இல. 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

எதிர்வரும் மாசி மாதம் 5ஆம் திகதி நடைபெற இருக்கும் எமது நிறுவனத்தின் 9ஆவது நிறுவன தின விழாவில் கல்வியாண்டு 2004 இல் கற்கை நெறிகளை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட இருப்பதால் கல்வியாண்டு 2004இல் கற்கை நெறிகளை முடித்துக்கொண்ட மாணவர்கள் அனைவரும் 28.01.2005ஆம் திகதிக்கு முன்பு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

இயக்குநர்.
IIS, யாழ்ப்பாணம். (சி-40504)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா நடராசா



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா நடராசா அவர்கள் நேற்று முன்தினம் (20.01.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஒஸ்கா லேன்,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (41049)(30-11-45)

தகவல்:
பிள்ளைகள்.

## லயன் கார்த்திகேசு கேசவன்,
### (மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியசுவாமி கோயில் நிர்வாகசபை உறுப்பினருமான லயன் கார்த்திகேசு கேசவன் அவர்கள் 18.01.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு தெல்லிப்பழை, சம்பிட்டியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோடாக்கம்பனி ஒழுங்கை,*
*மல்லாகம், தெல்லிப்பழை.* (41042)(30-11-45)

தகவல்:
கே.முகுந்தன் (மகன்).

## சுப்பையா யோகலிங்கம்
### (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா யோகலிங்கம் அவர்கள் நேற்று (21.01.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.* (சி-40587)(30-11-45)

தகவல்:
ப.சோமாஸ்கந்தராசா.

## திருமதி செல்லப்பா தெய்வானை



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல. 50/3, முதலாம் ஒழுங்கை,பருத்தித்துறை வதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா தெய்வானை 19.01.2005 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப.3.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/3, முதலாம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (41050)

தகவல்:
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளை.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.